**ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 24 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 மே 22 மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீடு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பெற வேண்டிய ரூபா 466,706 ஆன நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | கணக்குகள் தயாரிக்கப்பட்ட பின்பு வருமானம் கிடைத்ததாக அறிவிக்கிறேன். |

#### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பெற வேண்டிய கணக்குகள் | | |
| 05 ஆண்டுகளை விஞ்சி பெற வேண்டிய மீதி ரூபா 85,750 ஆனதுடன், 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட காலத்தை விஞ்சிய மீதி ரூபா 1,907,737 ஆனது | பெற வேண்டிய தொகைகள் அறவிடப்பட வேண்டும் | எதிர் காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள் | | |
| 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய மீதி ரூபா 1,907,737 ஆனது. | கொடுப்பனவுகள் தீர்க்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் தீர்க்க நடவடிக்கை எடுக்கிறேன். |

### 1.3.3 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 1,813,867 ஆன 08 கணக்கு விடயங்களிற்கான பதிவேடுகள் மற்றும் கோவைகள் என்பவற்றை கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை சமர்பிக்க வேண்டும். | 2020 ஆண்டின் போது, சீர்செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

### 1.3.4 இணங்காமைகள்

#### 1.3.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) பாராளுமன்ற சட்டங்கள் | | | |
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டம் | | | |
| 159(1) ஆம் பிரிவு. | 02 ஆண்டுகளிற்கும் 06 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட காலமாக 256 சொத்துகளிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை வீதவரி தொகை ரூபா 732,799 ஆனது. | நிலுவை தொகையை அறவிட வேண்டும் | எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| நி.பி. 702(03) | வேலை உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் சமர்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

**(இ)** ஏனைய சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| தேசிய சுற்றாடல் அதிகார சட்ட ஏற்பாடுகளிற்கு அமைய பிரசுரிக்கப்பட்ட 2008 பெப்ரவரி 25 திகதிய மற்றும் 1533/16 இலக்க வர்த்தமானி. | 09 சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை புதிப்பிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டம் மற்றும் வர்த்தமானி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் சரி செய்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 58,435,147 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 52,546,011 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | சிட்டையிடப் பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i | வீத வரி மற்றும் குத்தகை | 11,618,760 | 11,341,663 | 2,818,155 | 8,523,478 | 11,720,665 | 11,196,749 | 10,959,827 | 4,830,771 |
| ii | வாடகை | 2,960,200 | 1,269,450 | 1,161,670 | 107,780 | 2,662,600 | 1,180,510 | 1,627,680 | 24,090 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,695,180 | 3,256,622 | 2,963,882 | 292,740 | 2,874,200 | 2,476,666 | 2,482,266 | 18,000 |
| iv | ஏனைய வருமானம | 115,460,920 | 103,465,359 | 103,417,609 | 47,750 | 89,567,810 | 87,844,287 | 53,353,773 | 97,750,424 |
| | கூட்டுத் தொகை | 133,735,060 | 119,333,065 | 107,694,317 | 11,638,748 | 106,875,275 | 102,698,213 | 68,423,546 | 102,623,285 |

**2.2.2 வீதவரி மற்றும் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வீதவரி | | |
| மீளாய்வாண்டு இறுதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா 8,440,434 ஆன வீதவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகை அறவிடப்பட வேண்டும். | எதிர் காலத்தில் நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) குப்பை வரி | | |
| மீளாய்வாண்டு இறுதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா 71,000 ஆன குப்பை வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகை அறவிடப்பட வேண்டும். | எதிர் காலத்தில் நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

**2.2.3 ஏனைய வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) முச்சக்கர வண்டி கட்டண அறவீடு | | |
| மீளாய்வாண்டு இறுதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா 973,850 ஆன முச்சக்கர வண்டி கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகை அறவிடப்பட வேண்டும். | எதிர் காலத்தில் நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) குழாய் கிணறு வருமானம் | | |
| மீளாய்வாண்டு இறுதியில் அறவிடப்பட வேண்டிய நிலுவை குழாய் கிணறு வருமானம் ரூபா 775,863 ஆனது. | வருமானத்தை சரியாக இனங்கண்டு நிலுவை தொகையை அறவிட வேண்டும். | கணிப்பீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அது முடிவடைந்தவுடன் குறித்த நடவடிக்கை எடுக்கிறேன். |

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 993,578 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 95,757,706 ஆனது. | பெற வேண்டிய தொகையை பெற்றுக் கொள்ள வேண்டும். | நிலுவையை எதிர் காலத்தில் அழைப்பித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் அதிகார பிரதேசத்தில் பொது மக்களிற்காக நானாவித வேலைகளை செயற்படுத்தியிருந்த போதும், அவைகள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குடன் எவ்வாறு இனங்குகின்றன, என்பது தொடர்பாக மதிப்பீடொன்றை மற்றும் பின்னூட்டல் செயற்பாடொன்றை மேற்கொண்டிருக்கவில்லை. | பின்னூட்டல் செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். | 2020 ஆண்டு முதல் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2014 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை காலத்தினுள் கிடைத்த ரூபா 539,145 ஆன அன்பளிப்பு தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சபையின் நோக்கங்களுக்காக பணம் பயன்படுத்தப்பட வேண்டும். | எதிர் காலத்தில் பணததை பயன்படுத்திகிறேன். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஊழியர் வெற்றிடமும் மிகையும் | | |
| 2019 திசெம்பர் 31 திகதிக்கு சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினுள் 16 வெற்றிடங்கள் காணப்பட்டன. | அங்கீகரிக்கப்பட்ட ஆளணியை நிரப்பிக் கொள்ள வேண்டும். | ஆட்சேர்க்க தேவையான நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சொத்துக்களை வாடகைக்கு வழங்குவதன் குறைபாடுகள். | | |
| சபை தீர்மானமின்றி 07 கைத்தொழில்களிலிருந்து குப்பை வரி அறவிடுவதை இடை நிறுத்தியிருந்தது. | வருமானம் அறவிடப்பட வேண்டும். | எதிர் காலத்தில் சபைக்கு சமர்பித்து, தீர்மானமெடுக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சொத்துக்களிலிருந்து பெறவேண்டிய வருமானம் பெறப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அலதெணிய சிறுவர் பூங்காவிற்காக அறவிடப்பட்ட உட்பிரவேசக் கட்டணம் 2018 மார்ச் முதல் சபை தீர்மானமின்றி கைவிடப்பட்டிருந்தது. | வருமானத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஜனவரி முதல் மீண்டும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.5.2 விளைவற்ற/ குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | இ-நென இல்ல வட்டார தகவல் தொழில்நுட்ப மத்திய நிலையம் | | |
| | சபையில் செயற்படும் இ- நென இல்ல வட்டார தகவல் தொழில்நுட்ப மத்திய நிலையம் 2019 ஜுலை மாதம் முதல் நிறுத்தப்பட்டிருந்ததுடன், மத்திய நிலையத்தின் 03 கணனிகள் செயலற்று நிலவின. | சொத்துக்களிலிருந்து உச்ச பயன்பாட்டை எடுக்க வேண்டும். | இக் கருத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சான்றிதழ்களின் செல்லுபடித் தன்மை மற்றும் ஏனைய நிறுவனங்கள் கணனி பாடநெறிகளை நடாத்துவதனால், மாணவர்களின் குறைவு மீது நிறுத்த வேண்டி ஏற்பட்டதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | செலுத்து நிலையிலுள்ள ரூபா 2,938,260 பெறுமதியான 04 வாகனங்கள் குறைபயன்பாட்டுடன் நிலவின. | சொத்துக்களை பயன்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏலமிடுவதற்கான நடைமுறைகளை எடுக்கிறேன். |

**3.6 பெறுகைகள்**

**3.6.1 பெறுகைகள் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆண்டினுள் ரூபா 65,776,895 ஆன மூலதன செலவுகளை சபை மேற்கொண்டிருந்த போதும், பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆண்டில் சீர்செய்கிறேன். |